# குழந்தை திருமணத்தை தடுக்க விழிப்புணர்வு

## மாவட்ட முதன்மை நீதிபதி அறிவுரை

**நாமக்கல், ஜூன் 24–**

'குழந்தை திருமணத்தை தடுக்க பெற்றோரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்' என, நாமக்கல் மாவட்ட முதன்மை நீதிபதி பேசினார்.

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, மாவட்ட சட்டப் பணிகள் ஆணையம் மற்றும் தொண்டு நிறுவனம் சார்பில், தமிழகத்தில் பெண் குழந்தைகள் திருமணத்தை தடுப்பது குறித்த கருத்தரங்கம், நாமக்கல்லில் நடந்தது.




■ நாமக்கல்லில் நடந்த, மண்டல அளவிலான பெண் குழந்தைகள் திருமணத்தை தடுப்பது குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கில், மாவட்ட முதன்மை நீதிபதி இளவழகன் பேசினார்.

நாமக்கல் முதன்மை நீதிபதியும், சட்டப்பணிகள் ஆணைய சேர்மனுமான இளவழகன் பேசியதாவது: பதினெட்டு வயது முடியாத பெண்களுக்கு, திருமணம் செய்து வைப்பது குழந்தைத் திருமணமாகும். இது சட்டப்படி குற்றம். இதனால், அவர்களின் கல்வி அறிவு பாதிக்கப்பட்டு, தன்னம்பிக்கை குறைந்து, குழந்தைகளையும் சரியாக பராமரிக்க முடியாத நிலை ஏற்படுகிறது.

குழந்தையை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த பெற்றோர், பாதுகாவலர்கள் மற்றும் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள், முன்னின்று நடத்தியவர்கள் மற்றும் அத்திருமணத்தை தடுக்கத் தவறியவர்கள் என அனைவருமே குற்றவாளிகள். குழந்தைத் திருமணத்தை தடுக்க, பெற்றோரிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.